# திராவிடத்தின் பிதாமகரே! தமிழ் இனத்தின் பாதுகாவலரே!



திராவிடம் பெற்றெடுத்த தவப்புதல்வரே !
தங்கத்தமிழ்நாடு தேர்ந்தெடுத்த நிரந்தர முதல்வரே !
தன்மானத்தமிழினம் கண்டெடுத்த சரித்திர நாயகரே !
ஒடுக்கப்பட்ட மக்களின் நம்பிக்கை காவலரே !
சிறுபான்மையினரின் பாதுகாவலரே !
உலகத்தமிழர்களின் தாயுமானவரே !
உழைப்பாளிகளின் உறவானவரே !

உம் காலடி பாட்ட பின் தான்
கீழடி புகழ் வெளிச்சம் பெற்றது !
நீர் அரியணை ஏறிய பின் தான்
தமிழர் வாழ்வு புது ஏற்றம் கண்டது !

மார்ச் 1 உமக்கு பிறந்தநாளாம் !
உம் தலைமையில்
செயல்பட்டு வரும்
கழக உடன்பிறப்புகளுக்கதுவே
ஆகச்சிறந்த பொன்னாளாம் !
உலகமே அதிசயிக்கும்
உம் அரசாட்சி !
நம் கழகமே
தமிழ்நாட்டின் மனசாட்சி !

மாணவ செல்வங்களுக்கு அளித்திட்டீர் ஆயிரம் திட்டம் !
அது பொறுக்காமல்
பொங்கி ஆர்ப்பரிகிறது
ஆரியக்கூட்டம் !
படிக்கும் பிள்ளைகள்
சத்தாய் வளர,
முத்தாய் அளித்திட்டீர்
முதல்வர் காலை உணவுத்திட்டம் !
நாளைய தலைமுறையின் படிக்கும் ஆர்வத்தை
தூண்ட
நான் முதல்வன் திட்டம் !
தாயுமானவன் திட்டம்!
தமிழ்ப்புதல்வன் திட்டம்!
ஐ.நா வே வியந்து போற்றும்
இல்லம் தேடி கல்வித்திட்டம்!
பெண்கல்வியை ஊக்குவிக்கும்
புதுமைப்பெண் திட்டம்!

அப்பப்பா ! !

எத்தனை,எத்தனை திட்டங்கள்
உம் சீரிய சிந்தனையால் !
அந்த நன்றிப்பெருக்கோடு மாணவ சமுதாயம் உளமார
உமை அழைக்கிறது
“அப்பா” என்று,
தப்பாக கூட நல்லது
ஏதும் செய்திடாத,
அடாத கூட்டமொன்று
“அப்பா” என்றழைப்பது கேட்டு
பித்துப்பிடித்து அலையுதங்கே !

தேசியக்கல்வி கொள்கையென்று
கொல்லைப்புறவழியில் குலக்கல்வியை புகுத்த நினைத்த
பாசிச கும்பல்,
கல்வியை வளர்க்க திட்டம் தீட்டாமல்,
இந்தியை வளர்க்க திட்டம் தீட்டி
இன்று,மும்மொழி கொள்கையை ஏற்றாலே கல்விநிதி
என அச்சுறுத்த,
சுயமரியாதை சிங்கமென
வெகுண்டெழுந்த உம் தீரம்
கண்டு சிலிர்த்து போனது
தமிழ் இனம் !
வாயடைத்து போனது இந்துத்துவம் !

இன்னும் 1000 ஆண்டுகள் கடந்தாலும்,
திராவிட மாடலின் பெயர் சொல்லும்
நீங்கள் அளித்துள்ள
ஆக்கபூர்வ திட்டங்கள் !



**முனைவர்**
**பி.பழனியப்பன்**
செயலாளர்
தருமபுரி மேற்கு
மாவட்ட தி.மு.க.

திராவிட பேரரசரே !
இன்னுமொரு மொழிப்போருக்கு
நாங்கள் தயாரென
உம் பின்னால்
அணி திரண்டுள்ளது
தமிழ் இனம் !

ஏனெனில் நீரே
எம் சமூகநீதி போராளி !
ஆரிய பாசிசத்திற்கு எதிராளி !
எல்லாரும்,எல்லாமும் பெற வேண்டும்,
தமிழர் வாழ்வு மலர வேண்டும் !
அதுவே நின் குறிக்கோளாகும் !
2026 லிலும் நீரே தமிழ்நாட்டை ஆள வேண்டும் !
நாட்டு மக்கள் வளம் பெற வேண்டும் !
நீவிர் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் !
வாழ்த்துகிறேன் ! வணங்குகிறேன் !

---



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டமாக கள்ளக்குறிச்சி தெற்கு மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 02.03.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | கள்ளக்குறிச்சி தெற்கு | கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், தியாகதுருகம் பிரதான சாலை, கள்ளக்குறிச்சி. |
| | மாலை 4.00 மணி | கள்ளக்குறிச்சி வடக்கு | கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக அலுவலகம், ராஜா நகர், கள்ளக்குறிச்சி. |

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 26-02-2025



---



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தருமபுரி மேற்கு மாவட்டம் அரூரில் பேரூர் கழக செயலாளர் முல்லை ரவி ஏற்பாட்டில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் அரூர், சட்டமன்ற தொகுதிகளில் 21 பள்ளிகளில் பயிலும் 1742 மாணவ,மாணவியர்க்கு பனிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வை முன்னிட்டு எழுதுபொருள் தொகுப்பினை வழங்கினார்.நிகழ்வில் மாநில நிர்வாகி ராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர் பொறியாளர்.சி.கிருஷ்ணகுமார், ஒன்றிய கழக செயலாளர்கள் வேடம்மாள்,சௌந்தரராசு,ரத்தினவேல், பேரூர் கழக செயலாளர் மோகன்,பேரூராட்சி தலைவர்கள் திருமதி. இந்திராணி, வடமலைமுருகன்,துணைத் தலைவர் சூர்யா.தனபால்,மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

## மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் முதல்வர் பிறந்த நாளை சிறப்புடன் கொண்டாடுவோம்

### மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானம்!

மயிலாடுதுறை, மார்ச் 1- மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி. சீனிவாசன் தலைமை தாங்கினார். கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்தும் மயிலாடுதுறை மாவட்டக்கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் பேசினார். கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் சௌமியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், ஏ.சி.என். விஜயபாலன், எம்.எம்.சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், முத்து.மகேந்திரன், ஜி.என். ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், கண்ணகிபன்னீர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்ல சேது.ரவிக்குமார், மங்கை எம்.சங்கர், மூவலூர் எம். மூர்த்தி, என்.இளையபெருமாள், மலர்விழிதிருமாவளவன், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பி.எம்.அன்பழகன், எம். அப்துல்மாலிக், மற்றும் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்ற ப்பட்ட தீர்மானங்கள்.

50 ஆண்டு கால பொது வாழ்க்கைக்கு சொந்தகாரர், பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் கழகத்தில் பொதுக்குழு உறுப்பினர், துணை பொதுச்செயலாளர், இளைஞர் அணி மாநில செயலாளர், கழக பொருளாளர், கழக துணைத் தலைவர், கழகத்தலைவர் என்றும், பொது வாழ்க்கையில் சென்னை மேயர், சட்ட மன்ற உறுப்பினர், அமைச்சர், துணை முதல்வர், முதல்வர் என உழைப்பால் உயர்ந்த கழகத்தலைவர், திராவிட மாடல் அரசின் முதல்வர் மாண்புமிகு தளபதி முத்துவேல்கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் வரும் மார்ச் 1ம் தேதி அன்றும் மற்றும் மாதம் முழுவதும் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளை, வார்டுகள் தோறும் கழகத்தலைவரை வாழ்த்தி சுவர் விளம்பரம் எழுதியும், கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவிகள் வழங்கியும், ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களில் உணவு, உடை வழங்கியும்,ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக பொதுக்கூட்டம், தெரு முனை பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தியும், மருத்துவ முகாம், இரத்ததான முகாம் நடத்தியும், மரக்கன்றுகள், நட்டும், வழங்கியும் , பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இனிப்பு மற்றும் நோட்டு, பேனா உள்ளிட்ட எழுது பொருட்கள் வழங்கியும் எழுச்சியுடன் சிறப்பாக கொண்டாடிடுவது என்றும் ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழகச்செயலாளர்கள் செய்திட வேண்டும் என்றும், தளபதி பிறந்த நாள் விழாவில் மாநில, மாவட்டக்கழக நிர்வாகிகள், சட்ட மன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டுகழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும், .

2026 சட்ட மன்ற தேர்தலில் கழகத்தலைவர் மாண்புமிகு தலைவர் அவர்கள் இலக்கான 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெல்வோம் என்ற இலக்கை எட்டும் வகையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள 3 தொகுதிகளுக்கு அறிவிக்கும் வேட்பாளர் அதிக வாக்குகள் வித்தியாகத்தில் வெற்றிப் பெற செய்திடும் வகையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளை, வார்டுகள் தோறும் கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்து கூறி கழகத்தினர் திண்ணை பிரச்சாரத்தை தொடங்கிட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.



வானூர் சட்டமன்றத் தொகுதி, வானூர் மேற்கு ஒன்றிய செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டத்தில் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன் அவர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், ஒன்றிய கழக செயலாளர் இரா.மைதிலி ராஜேந்திரன், கண்டமங்கலம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.எஸ்.வாசன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருவக்கரை ஜி.பாஸ்கர், பொதுக்குழு உறுப்பினர்கள் டி.ஆர்.இளங்கோவன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ.இரவிச்சந்திரன்

**மார்ச் 1 (2021)**



தளது இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.

முப்பது ஆண்டுகள் தொடர்ந்து திருப்பனந்தாள் ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

திருப்பனந்தாள் ஊராட்சி மன்றத் தலைவர், ஒன்றிய பெருந்தலைவர், நிலவள வங்கி தலைவர், சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டக சாலை தலைவர், திருவிடைமருதூர் வீட்டு வசதி வாரிய தலைவர், மாநில நிலவள வங்கி இயக்குநர், தஞ்சை வேளாண் விற்பனைக்குழு துணைத் தலைவர் என பல்வேறு பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பலகுரலரசு ‘மிசா’ முருகுபாண்டியன்

**மார்ச் 1 (2016)**



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் பேச்சுக்களால் ஈர்க்கப்பட்டு ஆசிரியர் பணியில் இருந்து விலகி கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

1957இல் ‘உதயசூரியன் நாடக மன்ற’த்தை தஞ்சையில் தொடங்கி 1000க்கும் மேற்பட்ட நாடகங்களையும், 40,000க்கும் மேற்பட்ட கலை நிகழ்ச்சிகளையும் நடத்தியவர்.

கழக மாநாடுகளில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியின் போது பலகுரலில் பேசியதை கண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் இவருக்கு “பலகுரலரசு” எனும் பட்டம் அளித்து பாராட்டினார்..

நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.

“கழகத்திற்கு சோதனை வந்த காலங்களில் என்னைவிட்டு எங்கும் செல்லாமல், எல்லா சோதனைகளின் போதும், வேதனைகளின் போதும் என்னுடனே இருந்து ஓங்கி ஒலித்த குரல், இந்த பலகுரல் தம்பி முருகுபாண்டியன்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**